No. of Printed Pages : **4**

**8386**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# Part III — Vocational Subjects

# வேளாண் அறிவியல்

# AGRICULTURAL SCIENCE

( தமிழ் வழி / Tamil Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிப்பில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** உலகளவில் நெற்பயிரில் பயிரிடப்படும் சிற்றினங்கள் __________.

(அ) ஒரைசா சட்டைவா (ஆ) ஒரைசா கிளாபிரிமா

(இ) (அ) மற்றும் (ஆ) (ஈ) ஜியா மெய்ஸ்

**2.** கரும்பில் தெளிக்கப்படும் முதிர்ச்சி ஊக்கி __________.

(அ) சோடியம் மெட்டாசிலிகேட் (ஆ) தாமிர சல்பேட்

(இ) மாங்கனீசு சல்பேட் (ஈ) இரும்பு சல்பேட்

**3.** சம்பங்கி __________ மூலம் பயிர்ப்பெருக்கம் செய்யப்படுகிறது.

(அ) குமிழ்கள் (ஆ) இளம் தளிர்கள்

(இ) பக்கக் கன்றுகள் (ஈ) வேர்க்கன்றுகள்

[ திருப்புக

4. மா பயிரின் இரகம் __________.
(அ) பூவன் (ஆ) மல்கோவா (இ) நமரை (ஈ) மொந்தன்

5. நைட்ரஜன் இழப்பு __________ போன்ற காரணங்களால் ஏற்படுகிறது.
(அ) கசிதல் (ஆ) மேல் மட்ட ஆவியாதல்
(இ) அரிமானம் (ஈ) இவை அனைத்தும்

6. கோடை உழவு என்பது __________ பயிர் பாதுகாப்பு ஆகும்.
(அ) உயிரியல் முறை (ஆ) சாகுபடி முறை
(இ) சட்ட முறை (ஈ) இயற்பியல் முறை

7. மானாவாரி பண்ணையத்தில் __________ முக்கிய அங்கமாகும்.
(அ) தேனீ வளர்ப்பு (ஆ) மீன் வளர்ப்பு
(இ) காளான் வளர்ப்பு (ஈ) வேளாண் காடுகள் வளர்ப்பு

8. இரசாயன சடுதிமாற்றி __________.
(அ) வெப்பமான நியூட்ரான்கள் (ஆ) ஈத்தைல் மீத்தேன் சல்போனேட்
(இ) X - கதிர்கள் (ஈ) ஆல்ஃபா துகள்கள்

9. செங்குத்துத் தோட்டத்திற்கு ஏற்ற வளர்ப்பு ஊடகம் __________.
(அ) பெர்லைட் (ஆ) மண்புழு உரம்
(இ) தென்னை நார்க்கழிவு (ஈ) இவை அனைத்தும்

10. இரசாயன உரங்களை முழுவதுமாகத் தவிர்த்து வேளாண்மை செய்வது __________.
(அ) கலப்பற்ற அங்கக வேளாண்மை
(ஆ) ஒருங்கிணைந்த அங்கக வேளாண்மை
(இ) வணிக வேளாண்மை
(ஈ) (அ) மற்றும் (ஆ)

11. வேலையாள் தேனீயின் ஆயுட்காலம் __________ ஆகும்.
(அ) 6 - 8 வாரங்கள் (ஆ) 2 - 3 மாதங்கள்
(இ) 6 மாதங்கள் (ஈ) 3 ஆண்டுகள்

12. வணிக ரீதியாக காளானை உற்பத்தி செய்ய __________ ஏற்றவை.
(அ) மொட்டுக் காளான் (ஆ) பால் காளான்
(இ) சிப்பிக்காளான் (ஈ) இவை அனைத்தும்

13. கடல்சார் மேம்பாட்டு ஏற்றுமதி ஆணையம் __________ ஆகும்.
(அ) AYUSH (ஆ) MPEDA (இ) FSSAI (ஈ) APEDA

14. இந்திய கறவை இனங்களுள் முக்கியமானது __________ ஆகும்.
(அ) உம்பளாச்சேரி (ஆ) காங்கேயம் (இ) ஜெர்சி (ஈ) சிவப்பு சிந்தி

15. தொலை உணர்வு செயற்கைக்கோள்களில் ஒளிக்கதிர்களை உணர்ந்து படிமங்களாக மாற்ற __________ உதவுகிறது.
(அ) உணர்வி (ஆ) செயலி (இ) சோலார் பலகை (ஈ) கணினி

## பகுதி - II

**குறிப்பு : எவையேனும் 10** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **28 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **10x3=30**

16. நெல் பயிரிடப்படும் முறைகளில் மூன்றினைக் குறிப்பிடுக.

17. தழைச்சத்து விரயமாகும் வழிகள் யாவை ?

18. உயிரி தீங்குயிர்க் கொல்லி என்றால் என்ன ?

19. நவீன வேளாண்மை என்றால் என்ன ?

20. பூஜ்ய உழவு என்றால் என்ன ?

21. காளானை காப்புணவாகக் கருதுவது ஏன் ?

22. BIS பற்றி குறிப்பு வரைக.

23. வானிலைத் தகவல்களைத் தரும் செயற்கைக் கோள்கள் யாவை ?

24. ஈரப்பதத்தைப் பொருத்து விளைபொருட்களை எந்த வெப்பநிலையில் சேமிக்க வேண்டும் ?

25. கலவன் நீக்குதல் என்றால் என்ன ?

26. சிறப்பு வாழை இரகங்களில் ஏதேனும் மூன்றினை எழுதுக.

27. அறுவடை பின் நேர்த்திக்குப் பயன்படும் கருவிகளில் ஏதேனும் மூன்றினை எழுதுக.

28. அக ஒட்டுண்ணிகளால் ஏற்படும் பாதிப்புகள் யாவை ?

[ திருப்புக

## பகுதி - III

**குறிப்பு :** **எவையேனும் 5** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **35 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **5x5=25**

**29.** வறட்சி காட்டித் தாவரங்கள் பற்றி எழுதுக.

**30.** குறிப்பு வரைக. 'மா' கவாத்து செய்தல்.

**31.** இனக்கலப்பு தொழில்நுட்பத்தின் படிகள் யாவை ?

**32.** அங்கக வேளாண்மையின் கோட்பாடுகளை எழுதுக.

**33.** MPEDA -வின் பணிகள் யாவை ?

**34.** பட்டுப்புழு வளர்ப்பில் இளம்புழு வளர்ப்பு பற்றி எழுதுக.

**35.** பதப்படுத்துதலினால் ஏற்படும் பாதிப்புகள் யாவை ?

## பகுதி - IV

**குறிப்பு :** கீழ்கண்ட வினாக்களுக்கு **இரண்டு பக்க அளவில்** விடையளிக்கவும். **2x10=20**

**36.** (அ) திருந்திய நெல் சாகுபடி என்றால் என்ன ? திருந்திய நெல் சாகுபடியின் கோட்பாடுகள் யாவை ?

**அல்லது**

(ஆ) ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளில் இயற்பியல் முறைகளை விளக்குக.

**37.** (அ) வேளாண்மையில் நானோ தொழில்நுட்பம் பற்றி விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) கோழிகளின் வளர்ப்பு முறையினை எழுதுக.

**- o 0 o -**